2. ஒத்திவைப்புத் தீர்மானம்.

சேரன் போக்குவரத்துக் கழகத்தைச் சார்ந்த திரு. யூ. எஸ். விசுவநாதன் தீக்காயங்களால் மரணமடைந்தது குறித்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் ஆற்காடு நா. வீராசாமி அவர்கள் ஓர் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்துள்ளார்கள். மேதகு ஆளுநர் உரையின் மீது பேசுவதற்கு உறுப்பினர் அவர்களுக்கு வாய்ப்பு உள்ளதால், இதற்கு அனுமதி மறுக்கிறேன். மேலும், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் இதுகுறித்து அவைக்கு ஓர் அறிக்கையை அளிக்கவிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் ஏதேனும் விளக்கம் கேட்க விரும்பினால் அதற்கு நான் அனுமதி தருகிறேன். இதே பொருள் குறித்து திரு. வீராசாமி அவர்களும், திரு. நல்லசிவம் அவர்களும் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளார்கள். விரும்பினால் அவரும் விளக்கம் கேட்கலாம்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த திரு. யூ. எஸ். விசுவநாதன், சேரன் போக்குவரத்துக் கழகத்தில் 6—1—1973 அன்று தினக்கூலியில் வேலைக்கமர்ந்து பின்னர் 1—2—1975 முதல் மாதாந்திர சம்பளத்தில் பணி புரிந்து வந்தார். 30—8—1978 அன்று காலை 5-45 மணிக்கு திரு. விசுவநாதன் பலத்த தீக்காயங்களுடன் உடுமலைப்பேட்டை அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டபொழுது அன்று காலை 5 மணியளவில் தானே தீ வைத்துக்கொண்டதாக அங்கிருந்த மருத்துவரிடம் திரு விசுவநாதன் கூறியதாகவும் அதுபற்றிய குறிப்பினை மருத்துவமனை விபத்து அறிக்கையில் (ஹாஸ்பிட்டல் ஆக்சிடென்ட் ரிப்போர்ட்டில்) அம்மருத்துவர் குறித்துள்ளதாகவும் கோவை மாவட்ட ஆட்சித் தலைவரும், மாநில காவல் துறை தலைமை அதிகாரியும் அறிவித்துள்ளனர். இந்நிலையில் வழக்கின் புலன் விசாரணை மிக்க எச்சரிக்கையுடனும் தீவிரமாகவும் நடத்தப்பட்டு வருகிறது. இந்தச் சம்பவம் 30—8—1978 அன்று காலை சுமார் 5-00 மணிக்கு நடந்தது. தீவிர சிகிச்சை அளித்தும் பலனளிக்காமல் அன்று இரவு 8-10 மணிக்கு திரு. விசுவநாதன் காலமானர். இ.பி.கோ. பிரிவு 307-ன்கீழ் காவல் துறையினர் ஒரு வழக்கைப் பதிவு செய்து பின்னர் திரு. விசுவநாதன் இறந்த பிறகு இ.பி.கோ. பிரிவு 302-க்கு அதனை மாற்றி தீவிர விசாரணை செய்து வருகின்றனர். திரு. குமாரவேலு காவல் துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளார். திரு. குமாரவேலு சேரன் போக்குவரத்துக் கழகத்தால் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளார். தலைமறைவாகியுள்ள திரு. கன்னையனை காவல் துறை தேடி வருகிறது. மேற்கொண்டு புலன் விசாரணை கவனமாகவும் தீவிர

மாகவும் காவல் துறையால் நடத்தப்பட்டு வருகிறது. உடுமலைப்பேட்டையில் அமைதி நிலவச் செய்ய கோவை மாவட்ட ஆட்சித் தலைவரால் அனைத்துக் கட்சிக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது. இப்போது அங்கு அமைதி நிலவு கிறது. திரு. விசுவநாதனின் குடும்பத்திற்கு ரூபாய் பத்தாயிரம் நிதியுதவி அளிக்க ஆணையிடப்பட்டுள்ளது. புலன் விசாரணை முடிந்தபின் மேற்கொண்டு சட்டப்படி தகுந்த நடவடிக்கை விரைந்து எடுக்கப்படும்.

(பிற்பகல் 4-50)

திரு. ஆற்காடு நா. வீராசாமி : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிக்கையிலிருந்து இறந்துவிட்ட விசுவநாதன் என்பவர் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர் என்றும், அவர் நிரந்தரமாக்கப் பட்ட பிறகு இப்படிப்பட்ட சம்பவம் நடைபெற்றிருப்பதாகவும் குறிப்பிட் டார்கள். இறந்தவர் எந்த இயக்கத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும், இப்படிப்பட்ட கொடுமைகளை எந்த அரசாங்கமும் மன்னிக்க முடியாது. இந்தச் சூழ்நிலையில் குமாரவேலு என்பவர் கன்னையனால் தூண்டப்பட்டுதான் இந்தச் சம்பவம் நடைபெற்றிருக்கிறது என்று வாக்குமூலம் கொடுத்திருக்கிறார். கன்னையன் கிடைக்கவில்லை என்று சொல்கிறார்கள். கன்னையனைக் கைது செய் யாமல் விட்டுவிட்டால், அந்தத் தொழிலாளர்கள் மத்தியில் நம்பிக்கை போய் விடும். அதனால் காவல் துறையினர் உடனடியாக சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுத்து தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு, நம்பிக்கை ஏற்பட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : உறுப்பினர் கருதுகிற அளவுக்கு தீவிர மான நடவடிக்கைகளை காவல் துறையினர் மேற்கொண்டு வருகிறார்கள். அரசு அதற்கான உத்தரவைக் கொடுத்துள்ளது.

திரு. ஆ. நல்லசிவம் : தலைவர் அவர்களே, சேரன் போக்குவரத்துக் கழகத்தில் ஏற்பட்ட இந்த சம்பவங்களுக்கு முன்பே இதுபோன்றவைகளுக்குக் காரணமாக இருக்கிற அதிகாரிகளைப்பற்றி எங்கள் சி.ஐ.டி.யு. ஸ்தாபனம் அமைச்சர் அவர்களுக்கு எச்சரிக்கை செய்திருக்கிறது. அங்குள்ள ஜெனரல் மானேஜர், மானேஜிங் டைரக்டர் போன்றவர்கள் சுமார் 50 தொழி லாளர்களை வேலை நீக்கம் செய்தும் மாற்றுதல் செய்தும் கொடுமைப்படுத்தியிருக் கிறார்கள். 29 ஆம் தேதி நடந்த இந்தச் சம்பவம் கூட ஒரு தேர்தலை ஒட்டித் தான் நடந்திருக்கிறது. நிர்வாகக் குழு தேர்தலில் போட்டியிட்டதன் காரண மாக 30 ஆம் தேதி அவர் இரண்டு அதிகாரிகளால் கூப்பிடப்பட்டு ஆபீசில் வைத்துக் கொளுத்தப்பட்டிருக்கிறார் என்று தகவல் அரசிற்கு வந்திருக்கிறதா? அதுபற்றி அரசு பரிசிலனை செய்யுமா?

சேரன் போக்குவரத்துக் கழகத்தைச் சார்ந்த
திரு. யூ. எஸ். விசுவநாதன் தீக்காயங்களால் மரண
மடைந்தது குறித்து

1978 செப்டம்பர் 2]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: சேரன் போக்குவரத்துக் கழகத்தில் தொழிற்சங்கத் தேர்தல் நடந்தது உண்மை. அதில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக சார்பில் திரு. விஸ்வநாதன் அவர்கள் போட்டியிட்டார்கள். ஆனால் அந்த நிகழ்ச்சிக்கும் இந்த நிகழ்ச்சிக்கும் தொடர்பு இருக்கிறதா என்பதை காவல் துறை தீவிரமாகப் புலன் விசாரணை செய்து வருகிறது. அது புலன் விசாரணையிலே ஆய்வில் இருப்பதால், இத்துடன் விளக்கத்தை முடித்துக் கொள்கிறேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: இறந்துவிட்ட விஸ்வநாதனைப் பற்றிய இந்த வழக்கில் மாவட்ட ஆட்சித் தலைவர் போலீஸ் சூப்பிரண்டிடம் கொடுத்த புகாரும் இறந்துவிட்ட விஸ்வநாதன் அவர்கள் மாஜிஸ்ட்ரேட்டிடம் கொடுத்த ஸ்டேட் மெண்டும் ஒன்றுக்கொன்று முரண்பட்டதாக இருப்பதால், அரசு இன்வெஸ்டி கேஷன் செய்யும்போது, இன்வெஸ்டிகேஷன் அதிகாரியாக அந்த மாவட்டத்தில் உள்ளவரைத் தவிர்த்து வேறு மாவட்டத்திலுள்ள அல்லது தலைமையிடத்தி லுள்ள அதிகாரியை வைத்து ஸ்பெஷல் இன்வெஸ்டிகேஷன் செய்ய முன் வருமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: அதுபற்றியும் அரசு ஏற்கெனவே ஆணையிட்டிருக்கிறது.

திரு. ஆ. நல்லசிவம்: இப்போது உடுமலைப்பேட்டையில் ஏற்பட்ட இந்த சம்பவம் கோவையிலுள்ள ஜெனரல் மானேஜர், மானேஜிங் டைரக்டர் அவர்கள் அறியாமல் நடைபெறவில்லை. ஆகையால் சேரன் போக்குவரத்துக் கழகத்தி லுள்ள ஜெனரல் மானேஜர், மானேஜிங் டைரக்டர் மாற்றப்பட்டால்தான், உண்மை வெளியாகும் என்பதால், அவர்களை மாற்ற அரசுக்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: இந்த விஷயத்தில் மாண்புமிகு உறுப் பினர் அவர்கள் எந்த அளவுக்கு அக்கறையோடு இருக்கிறார்களோ அதே அளவுக்கு அரசும் அக்கறையுடன் இருக்கிறது. குற்றவாளி யார் என்று கண்டுபிடிக்க புலன் ஆய்வு நடக்கிறது. அதன் அடிப்படையில் சம்பந்தப் பட்ட அதிகாரிகள் யாராக இருந்தாலும், அரசு கடுமையான நடவடிக்கை எடுக்கும்.